# Joint Action Committee of Non-Executive Unions

## தமிழ் மாநிலம்

அன்புமிக்க தோழர்களே,

வணக்கம்.

தமிழ் மாநில JAC கூட்டம் தோழர் R.பட்டாபிராமன், மாநிலச் செயலர், NFTE தலைமையில் 31.07.2014 அன்று நடைபெற்றது. இந்த கூட்டத்தில் BSNLEU, NFTE-BSNL மற்றும் TEPU ஆகிய சங்கங்களின் மாநில செயலர்களும், நிர்வாகிகளும் கலந்து கொண்டனர். தமிழக JAC-ல் பங்கேற்க FNTO மற்றும் SEWA-BSNL சங்கங்களை அழைத்திருந்தோம். இந்த சங்கங்கள் JAC-ல் தங்களை இணைத்துக்கொள்ள JAC மீண்டும் வேண்டுகோள் விடுக்கிறது. கீழ்கண்ட முடிவுகள் ஏகமனதாக எடுக்கப்பட்டன.

1. மாநில அளவில் JAC அமைப்பில் கீழ்கண்ட முறையில் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

| | | |
|---|---|---|
| தலைவர் | : | தோழர் R.பட்டாபிராமன், மாநிலச் செயலர், NFTE-BSNL |
| கன்வீனர் | : | தோழர் S.செல்லப்பா, மாநிலச் செயலர், BSNLEU |
| இணை கன்வீனர்கள் | : | தோழர் A.செல்லப்பாண்டியன், மாநிலச் செயலர், TEPU |
| | | தோழர் P.அழகுபாண்டியராஜா, மாநிலச் செயலர், SNATTA. |

2. அனைத்து மாவட்டங்களிலும் உடனடியாக JAC அமைப்பை உருவாக்க வேண்டும். மத்திய மாநில வழிகாட்டுதல் படி மாவட்ட அளவில் JAC உருவாக்க வேண்டுகோள் விடுக்கிறோம்.

3. ஆகஸ்ட் 7ம் தேதி 30 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கோரிக்கை அட்டை அணிந்து பெருந்திரள் ஆர்ப்பாட்டத்தை வெற்றிகரமாக நடத்திட மத்திய JAC அறைகூவல் விடுத்துள்ளது. தமிழகத்தில் இந்த இயக்கத்தை வெற்றிகரமாக நடத்திட தமிழ் மாநில JAC யும் அறைகூவல் விடுக்கிறது. நியாயமான கோரிக்கைகளுகாக நமது வலுவான குரலை எழுப்புவோம். BSNL நிர்வாகம் பிரச்சனைகளை தீர்க்கவில்லை எனில் நமது போராட்ட வாளை மேலும் கூர்தீட்டுவோம். போராடுவோம்.

தோழமையுடன்

| R.பட்டாபிராமன் | S.செல்லப்பா | A.செல்லப்பண்டியன் | P.அழகுபாண்டியராஜா |
|---|---|---|---|
| மாநிலச் செயலர் | மாநிலச் செயலர் | மாநிலச் செயலர் | மாநிலச் செயலர் |
| NFTE-BSNL | BSNLEU | TEPU | SNATTA |

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)